## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 44/2024 |
| P.W. | : 11 |
| Name | : திருமதி. நாகலட்சுமி |
| Father Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026.

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை :-</u>**

**நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருசெங்கோடு ஊரக காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15-11-2020 ம் தேதி புளியம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் உதவி ஆய்வாளர் திரு. வசந்தகுமார் என்பவர் புளியம்பட்டி கா.நி.கு.எண். 739/2020 ச.பி. 174 கு.வி.மு.ச-வில் வழக்கு பதிவுசெய்து எனது பார்வைக்கு வைத்த முதல் தகவல் அறிக்கையின் நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10 மணி அளவில் சம்பவ இடமான புளியம்பட்டி முத்துநகர்,**

காக்காச்சிபாறை தங்கராஜ் என்பவரது காட்டில் வைத்து சாட்சிகள் ஈஸ்வரன், கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8.** மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம்பெற்றேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்திலேயே வைத்து 15-11-2020 ம் தேதி 12 மணி முதல் 16 மணி வரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் வழக்கில் இறந்துபோன சுப்பிரமணியன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9.** அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக ஆஜர்படுத்தவேண்டி த.கா.366 முத்துமாணிக்கம் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் மூலம் பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவருக்கு அனுப்பிவைத்தேன். **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.10.** பின்னிட்டு சாட்சிகள் செல்வராஜ், வனிதாமணி, நாகராஜ், கஸ்தூரி, சரோஜினி, பாஸ்கரன், நடராஜன், காளியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் ஜான்சிராணி, அழகிரி, கனிமொழி, சிலம்பரசன், ரங்கசாமி, பாலசுப்பிரமணியம், பெரியசாமி, பாக்கியராஜ், சரவணன், கணேசன், அய்யாவு, பன்னீர்செல்வம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேலும் இவ்வழக்கின் விபரங்களை பெற சிசிடிவி பூட்டேஜுகளை ஆய்வு செய்தேன். இறந்துபோனவரின் செல்போன் நெம்பரின் அழைப்பாணைகள் குறித்து விபரம் கேட்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்தேன். 03-03-2021ம் தேதி பணி மாறுதலின்பேரில் உதகமண்டலம் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கு கோப்பினை எனக்கு பின்னிட்டு வந்த காவல் ஆய்வாளர் வேலுச்சாமி என்பவரிடம் ஒப்படைத்தேன். **சுப்பிரமணியம் என்பவர் இறந்துபோன நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார் என்று வழங்கிய குறிப்பு அ.சா.ஆ.11.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தை யார் எனக்கு அடையாளம் காண்பித்தார்கள் என்று பார்வை மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பிரேதம் இறந்த நிலையில் இருந்ததை புகைப்படம் எடுத்து அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் புகைப்படம் எடுக்கப்பட்டது அதை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை வழக்கு கோப்பில் உள்ளது. வழக்கானது சந்தேக மரணம் என்ற அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சந்தேக மரணம் என்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட நிலையில் வழக்கினை வருவாய் துறை அதிகாரியின் விசாரணைக்கு நான் வேண்டுகோள் விடுக்கவில்லை என்றால் அவசியம் ஏற்படவில்லை என்பதால் அவ்வாறு விசாரணைக்கு வேண்டுகோள் விடுக்கவில்லை. உடற்கூராய்வு மற்றும் இறுதி அறிக்கையை 16-11-2020 அன்றே பெற்றேன் என்றால் உடற்கூராய்வு அறிக்கை தான் பெற்றேன். உடற்கூராய்வு அறிக்கை பெற்ற பின்னிட்டு வழக்கின் சட்டப்பிரிவை மாற்ற நான் நடவடிக்க எடுக்கவில்லை என்றால் சரிதான் இறுதி அறிக்கை பெறவில்லை என்பதால் சட்ட மாறுதல் செய்யவில்லை. இறுதிஅறிக்கை 16-11-2020 அன்று பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் வழங்கியுள்ளார்

என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் தங்கராஜ் காட்டின் வடபுறமாக கிழமேலாக முள்வேலி எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல எல்லையாக குறிப்பிட்டுள்ள பகுதிகள் முழுவதும் வேலி தான். மேற்படி எல்லைகளில் முள்வேலி இருப்பதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் தங்கராஜ் காட்டிற்கு வடபுறம் தற்காலிகமாக இருசக்கர வாகனங்கள் செல்லும் பாதை என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே இறந்துபோனவரின் பிரேதத்தை காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து காண்பித்தார்கள் என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தின் உரிமையாளர் தங்கராஜ் என்பவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் அவரை விசாரித்தேன் ஆனால் வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. அ.சா.ஆ.1 புகாரில் செந்தில்குமார் என்பவர் சாட்சி கையெழுத்திட்டுள்ளதாக உள்ளது அந்த நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று இறந்துபோனவரின் உடலை பார்வையிட்ட சமயம் அவரது உடலில் உடைகள் இருந்ததாகவோ அல்லது இல்லாமல் இருந்ததாகவோ நான் எந்த குறிப்பும் எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி இறந்துபோனவரின் உடலை நான் பார்த்த சமயம் அவரது இடது கையில் தீக்காயங்கள் எதுவும் நான் காணவில்லை என்றால் சரிதான். சாட்சி வனிதாமணி எனது விசாரணையில் மேற்படி இறந்துபோனவரின் உடலில் இடதுகையில் தீக்காயங்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் செருப்புகள் இருக்கவில்லை என்றால் அது பற்றி பார்வை மகசரில் குறிப்பிடவில்லை. சாட்சி பாஸ்கரன் எனது விசாரணையில்

இறந்துபோனவரின் வேஷ்டி கலைந்திருந்தது, அதில் ரத்தக்கறை இருந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து சான்று பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகாமையில் தடய பொருட்கள் எதுவும் இருக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் இறந்துபோன சுப்பிரமணியத்தின் உறவினர்கள் அவருக்கு சிறுவயதிலிருந்தே குடிப்பழக்கம் இருந்தது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சாட்சி செல்வராஜ், வனிதாமணி, நாகராஜ், கஸ்தூரி, சரஸ்வதி ஆகியோர்கள் இறந்துபோன சுப்பிரமணியத்திற்கு சிறுவயதிலிருந்தே குடிபழக்கம் இருந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் குடிபழக்கம் இருப்பதாக சொல்லியுள்ளார்கள் சிறுவயதிலிருந்து குடிபழக்கம் இருப்பதாக சொல்லவில்லை. மருத்துவர் உடற்கூராய்வு செய்தபோது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை 9 வது காலத்தில் சுப்பிரமணியம் குடிபோதைக்கு அடிமையாகியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பஞ்சாயத்தார்களின் கருத்தை தான் சொல்லியுள்ளேன். இறந்துபோன நபர் இறப்பதற்கு முன்பாக மது அருந்தியிருந்தாரா என்று காண அவரது உடல் உள்ளூறுப்புகளை கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்ப நான் வேண்டுகோள் கொடுத்தேனா என்றால் சாதாரணமாக இறப்பின் காரணம் அறிய உடற்கூராய்வு செய்யும் மருத்துவர் உடல் உள்ளூறுப்புகளை சேகரித்து வைத்துக்கொள்வார் நாங்கள் தனியாக அவ்வாறு வேண்டுகோள் கொடுப்பதில்லை. பிரேத விசாரணை அறிக்கை 15 வது காலத்தில் காலாலும், கல்லாலும் தாக்கியுள்ளதாக பஞ்சாயத்தார்கள் கூறியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கற்கள் எதுவும்

இருக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதேதி, நேரத்தில், சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், சாட்சிகள் முன்னிலையில் நான் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சட்டப்படியான நடைமுறைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் உரிய முறையில் வழக்கில் புலன்விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**